2026 பிப்ரவரி மாதம் 25- ஆம் தேதி புதன்கிழமை

கூடுதல் மாவட்ட விரைவு நீதிமன்றம், தேனி

S.C. நெம்பர் : 41/2021

2026-ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 25- ஆம் தேதி புதன்கிழமை திருமதி.ட.சுபத்ரா, கிரேடு I பெஞ்ச் கிளர்க் அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர்: | PW4 – மணிகண்டன் |
| தகப்பனார் பெயர்: | முருகராஜ் |
| ஊர்: | முந்தல் |
| வட்டம்: | போடிநாயக்கனூர் |
| மாவட்டம்: | தேனி |
| தொழில்: | Flex Printing |
| வயது : | 40 |

25.02.2026

(எதிரிகள் ஆஜர். எதிரிகளின் வழக்கறிஞரும் ஆஜர்).

(சாட்சி அழைக்கப்பட்டு சம்பந்தப்பட்ட போலீசாரால் அவரது ஆதார் அடையாள அட்டை அடையாளம் காணப்பட்டு ஒப்பீடு செய்யப்பட்டு பின் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் அளிக்கிறார்)

**முதல் விசாரணை:-**

நான் தற்சமயம் தேனி மாவட்டம், போடிநாயக்கனூர் வட்டம், முந்தல் கிராமத்தில் வசித்து வருகிறேன். நான் Flex printing தொழில் செய்து வருகிறேன். சுமார் 8 ஆண்டுகளுக்கு முன்பு நான் டவுன் காவல்நிலையம் அருகில் உள்ள எனது அலுவலகத்தில் இருக்கும்போது போடி டவுன் காவல்நிலைய போலீசார் என்னிடம் வந்தார்கள். என்னிடம் கையொப்பம் வாங்கினார்கள். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள 1வது சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். அது **அ.சா.ஆ.4-**ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை –</u>**

நான் எங்கு வைத்து கையொப்பம் செய்தேன் என்றால் காவல்நிலையம் முன்பு வைத்து கையொப்பம் செய்தேன். நான் வெள்ளைத்தாளில் கையொப்பம் செய்தேன். போலீசார் என்னிடம் எந்த வழக்கிற்காக கையொப்பம் வாங்கினார்கள் என்ற விபரம் என்னிடம் சொன்னார்களா என்றால் இல்லை. போலீசார் என்னிடம் கையொப்பம் மட்டும் வாங்கினார்கள் என்றாலும், போலீசார் என்னை விசாரிக்கவில்லை என்றால் சரிதான்.

**<u>மறு விசாரணை</u>** :– இல்லை

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் இன்று 25.02.2026 அன்று புதன்கிழமை சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

G SREE DEVI
Digitally signed by G SREE DEVI
Date: 2026.02.25 19:41:59 +0530

கூடுதல் மாவட்ட நீதிபதி, தேனி.
25.02.2026

2026 பிப்ரவரி மாதம் 25– ஆம் தேதி புதன்கிழமை

கூடுதல் மாவட்ட விரைவு நீதிமன்றம், தேனி

S.C. நெம்பர் : 41/2021

2026–ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 25– ஆம் தேதி புதன்கிழமை திருமதி.ட.சுபத்ரா, கிரேடு I பெஞ்ச் கிளர்க் அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர்: | PW5 – சிவா |
| தகப்பனார் பெயர்: | பாண்டியன் |
| ஊர்: | போடிநாயக்கனூர் |
| வட்டம்: | போடிநாயக்கனூர் |
| மாவட்டம்: | தேனி |
| தொழில்: | ஆட்டோ ஓட்டுநர் |
| வயது : | 35 |

25.02.2026

(எதிரிகள் ஆஜர். எதிரிகளின் வழக்கறிஞரும் ஆஜர்).

(சாட்சி அழைக்கப்பட்டு சம்பந்தப்பட்ட போலீசாரால் அவரது ஓட்டுநர் உரிமம் அடையாள அட்டை மூலம் அடையாளம் காணப்பட்டு ஒப்பீடு செய்யப்பட்டு பின் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் அளிக்கிறார்)

**முதல் விசாரணை**:–

நான் தற்சமயம் தேனி மாவட்டம், போடிநாயக்கனூர் வட்டம், போடிநாயக்கனூரில் வசித்து வருகிறேன். நான் ஆட்டோ ஓட்டி வருகிறேன். சுமார் 3 வருடங்களுக்கு முன்பு நான் பஜாரில் ஆட்டோ ஓட்டி வரும்போது போலீசார் என்னை அழைத்தார்கள், என்னிடம் கையொப்பம் பெற்றார்கள். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள 2வது சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். அது **அ.சா.ஆ.5–**ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை –**</u>

**நான் எங்கு வைத்து கையொப்பம் செய்தேன் என்றால் காவல்நிலையம் முன்பு வைத்து கையொப்பம் செய்தேன். நான் வெள்ளைத்தாளில் கையொப்பம் செய்தேன். போலீசார் என்னிடம் எந்த வழக்கிற்காக கையொப்பம் வாங்கினார்கள் என்ற விபரம் என்னிடம் சொன்னார்களா என்றால் இல்லை. போலீசார் என்னிடம் கையொப்பம் மட்டும் வாங்கினார்கள் என்றாலும், போலீசார் என்னை விசாரிக்கவில்லை என்றால் சரிதான்.**

<u>**மறு விசாரணை**</u> :– இல்லை

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் இன்று 25.02.2026 அன்று புதன்கிழமை சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

G SREE DEVI

Digitally signed by G SREE DEVI
Date: 2026.02.25 19:42:08 +0530

கூடுதல் மாவட்ட நீதிபதி, தேனி.
25.02.2026

2026 பிப்ரவரி மாதம் 25– ஆம் தேதி புதன்கிழமை

கூடுதல் மாவட்ட விரைவு நீதிமன்றம், தேனி

S.C. நெம்பர் : 41/2021

2026–ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 25– ஆம் தேதி புதன்கிழமை

திருமதி.ட.சுபத்ரா, கிரேடு I பெஞ்ச் கிளர்க் அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர்: | PW6 – துளசிராமன் |
| தகப்பனார் பெயர்: | நேதாஜி மோகன்ராம் |
| ஊர்: | தேனி |
| வட்டம்: | தேனி |
| மாவட்டம்: | தேனி |
| தொழில்: | தலைமை காவலர், வீரபாண்டி காவல்நிலையம் |
| வயது : | 45 |

25.02.2026

(எதிரிகள் ஆஜர். எதிரிகளின் வழக்கறிஞரும் ஆஜர்).

(சாட்சி அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் அளிக்கிறார்)

**முதல் விசாரணை:–**

நான் தற்சமயம் தேனி மாவட்டம், தேனி வட்டம், வீரபாண்டி காவல்நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 10.10.2019ம் தேதி காலை 10.00 மணியளவில் குரங்கனி காவல்நிலையத்தில் தலைமை காவலராக தனிப்பிரிவில் பணியிலிருந்தபோது போடிநகர் வட்ட பொறுப்பு ஆய்வாளரின் உத்தரவின்பேரில் குரங்கனி காவல்நிலைய குற்ற எண்.64/2019 பிரிவுகள் 174 கு.வி.மு.ச. சந்தேக மரணம் வழக்கில் இறந்துபோன டொம்புச்சேரியை சேர்ந்த கருப்பையா தேவர் மகன் பாபு என்பவரின் பிரேத பரிசோதனை அலுவலக தேனி, க.விலக்கு அரசு மருத்துவமனைக்கு சென்று,

பிரேதத்தின் அங்கம், மச்ச அடையாளத்தை அரசு மருத்துவரிடம் காண்பித்து, பிரேத பரிசோதனை முடிந்தவுடன் அவரது பிரேதத்தையும், உடைமைகளையும் உள்ளடக்கம் செய்வதற்காக அவரது மனைவியிடம் ஒப்படைத்து, பின்னர் அவரது உடல் உள்ளுறுப்புகள் விசிராவை பெற்று, 31.10.2019 ம் தேதி மதுரை தடய அறிவியல் அலுவலகத்தில் ஒப்படைத்து இரசீது பெற்று, காவல்நிலையம் வந்து, ஆய்வாளரிடம் அறிக்கை செய்தேன். காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை –</u>**

நான் சொன்ன தேதியில் சொன்ன இடத்தில், சொன்ன நேரத்தில் க.விலக்கு அரசு மருத்துவமனைக்கு பிரேதத்தை அடையாளம் காட்ட செல்லவில்லை என்றாலும், பிரேத பரிசோதனை முடித்தவுடன் பகுப்பாய்விற்கு விசிராவை மதுரை தடய அறிவியல் ஆய்வகத்திற்கு ஒப்படைக்கவில்லை என்றாலும், ஆய்வாளர் கேட்டுக்கொண்டதற்காக வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. ஆவணங்களை நான் ஆய்வாளரிடம் சமர்ப்பிக்கவில்லை என்றால் சரியல்ல.

**<u>மறு விசாரணை</u>** :– இல்லை

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் இன்று 25.02.2026 அன்று புதன்கிழமை சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

G SREE DEVI
Digitally signed by G SREE DEVI
Date: 2026.02.25 19:42:14 +0530

கூடுதல் மாவட்ட நீதிபதி, தேனி.
25.02.2026